www.padippakam.com


# ஜனசக்தி

சென்னை 18—5—85 சனி


## தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தை (பிளாட்) தொடர்ந்து ஏனைய ஈழவிடுதலை அமைப்புகளும்

# சிங்களர் படுகொலைக்குக் கண்டனம்

## நான்கு ஈழ விடுதலை அமைப்புகள் கூட்டறிக்கை

சென்னை, மே 18—

இலங்கை அனுராதபுரத்தில் உள்ள அப்பாவி சிங்களப் பொது மக்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டது கண்டிக்கத்தக்கது என்றும் உழைக்கும் சிங்கள மக்கள் உரிமை கோரி போராடும் தமிழ் இன மக்களுக்கு ஆதரவான சக்திகள் என்றும் தமிழ்ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (plot) செயலதிபர் உமா மகேஸ்வரன் ஒரு கண்டன அறிக்கை வெளியிட்டு இருந்தார்,

### வழிகாட்டுதலை ஒட்டி

அதனைத் தொடர்ந்து அவரது வழிகாட்டுதலை ஒட்டி ஈழம் புரட்சிகர அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஆகிய நான்கு அமைப்புகளும் அச்செயலுக்கும் எங்கள் அமைப்புகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் வன்மையாக கண்டிக்கிறோம் என்றும் அறிக்கை விட்டுள்ளனர். அதன் விவரம் வருமாறு:

### வன்மையாகக் கண்டிக்கிறோம்

இலங்கை அனுராதபுரத்தில் சிங்கள பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் எங்கள் அமைப்புகளின் ஆயுதப்படை பிரிவுகளுக்கும் சம்பந்தம் இல்லை. இறந்த காயமடைந்த சிங்களர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அனுராதபுரத்தில் நடந்த சிந்தனை அற்ற வன்முறைச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

### ஆயுதமேந்தியப் போராட்டம்

நாங்கள் இலங்கை அரசையும் பகுதிகளை ஆக்ரமித்துக் கொண்டு தமிழர்களைக் கொன்று குவித்து வரும் இலங்கை ராணுவத்தையும் போலீசாரையும் எதிர்த்து ஆயுதமேந்திப் போராட்டம் நடத்தி வருகிறோம்.

### புரட்சிகர கூட்டாளிகள்

சிங்கள நாட்டின் உழைக்கும் மக்கள்மீது எங்களுக்கு எப்பொழுதும் அனுதாபம் உண்டு. ஏனெனில் இலங்கை சர்வாதிகார அரசை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் அவர்கள் எங்களது புரட்சிகரக் கூட்டாளிகள்

### அப்பாவித் தமிழர்களை

ஈழ விடுதலை இயக்கங்களின் ஆயுதமேந்திய போராட்டத்திற்கு எதிர் விளைவாக ஒன்றுமறியாத அப்பாவித் தமிழர்களை இலங்கை அரசு கொன்று குவித்து வருகிறது.

### ஒட்டுமொத்த படுகொலை

ஒவ்வொருமுறை கொரில்லாத் தாக்குதல் நடந்த பிறகும் காட்டுமிராண்டித்தனமாக அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். இப்படி ஒட்டுமொத்தமாக ஒரு சமுதாயத்திற்கு தண்டனை வழங்கும் போக்கிற்கு நிரந்தரமான சாட்சியாக ஜூலைப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

### தாங்கமுடியாத கூட்டுக் கொலை

கடந்த சில வாரங்களாக இந்தக் கூட்டுக் கொலைகள் தாங்க முடியாத நிலையை எட்டி உள்ளன.

### பாசிச அரசு

தமிழர்கள் அனைவரையும் கொன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு காண இலங்கை பாசிச அரசு நினைக்கிறது.

### உள்நாட்டுப் போர்

சிங்களர்களையும் தமிழர்களையும் பேரழிவுக்கு உள்நாட்டுப் போரில் தள்ளிவிட இலங்கை பாசிச அரசு செயல்பட்டு வருகிறது.

### கடும் எச்சரிக்கை

ஒட்டு மொத்தமாக தமிழ்ச் சமுதாயத்தைக் கொன்று குவிக்கும் போக்கை இலங்கை அரசு தொடர்ந்து கடைப்பிடித்தால் வன்முறை மேலும் வெடிப்பதற்கு நாங்கள் பொறுப்பாக இயலாது.

### சூழ்ச்சிக்கு இரையாகாதீர்

தமிழினத்தை முற்றாக அழிக்க நினைக்கும் இலங்கை அரசின் பேரினவாதச் சூழ்ச்சிக்கு இரையாக வேண்டாம் என்று சிங்கள மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்

மேற்கண்டவாறு அக்கூட்டறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

TODAY Special NEWS